# <u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்ககிரி</u>

**அசல் வழக்கு எண் 56/2017**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | .. | **தர்மராஜ்** | மதம் | .. | **இந்து** |
| தந்தை / கணவர் பெயர் | .. | **பழனிவேல்கவுண்டர்** | தொழில் | .. | **விவசாயம்** |
| வயது | .. | 72 | ஜாதி | .. | |
| கிராமம் | .. | **மயிலேரிப்பட்டி** | நாள் | .. | 21.04.2023 |
| வட்டம் | .. | **சங்ககிரி** | | | |

2023 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 21-ஆம் நாள் வெள்ளிக்கிழமை திரு. தர்மராஜ் த/பெ. பழனிவேல்கவுண்டர் என்பவரின் சாட்சிய வாக்குமூலம் 1969-ஆம் ஆண்டின் 44-வது ஏற்பாட்டின்படி திரு.இரா.ராதாகிருஷ்ணன், பி.எ.,பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, சங்ககிரி அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

<u>வாதி தரப்பு 1 வது சாட்சியின் விசாரணை</u>

நான் இவ்வழக்கில் 2 ம் வாதி ஆவேன். நான் இவ்வழக்கில் வாதி தரப்பு 1 ம் சாட்சி ஆவேன். எனது தரப்பு முதன்மை சாட்சியத்தை எழுத்துமூலமாக நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். நிரூபண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அதில் உள்ள விபரங்கள் எனக்கு நன்கு தெரியும். எனது சாட்சியத்தை ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன்.

1) 22.02.1933 தேதியிட்ட கிரைய ஆவணம் உண்மை நகல் **வா.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

2) 31.09.1942 தேதியிட்ட பாகப்பிரிவினை ஆவணம் உண்மை நகல் **வா.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

3) 09.05.1957 தேதியிட்ட கிரைய ஆவணம் உண்மை நகல் **வா.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

4) 06.01.1960 தேதியிட்ட பாகப்பிரிவினை ஆவணம் உண்மை நகல் **வா.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

5) 18.01.1982 தேதியிட்ட பாகப்பிரிவினை ரத்து ஆவணம் உண்மை நகல் **வா.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

6) 08.09.2005 தேதியிட்ட பாகப்பிரிவினை ஆவணம் உண்மை நகல் **வா.சா.ஆ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

7) அ பதிவேடு சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.7** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

8) கந்தாய ரசீது அசல் (18 எண்ணிக்கை) **வா.சா.ஆ.8** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

9) நீதிமன்ற ஆணையர் தாக்கல் செய்த அறிக்கை **நீ.ம.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

10) நீதிமன்ற ஆணையர் தாக்கல் செய்த வரைபடம் **நீ.ம.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

(வா.சா.ஆ.7 ஆவணம் வழக்குரையுடன் இணைத்து தாக்கல் செய்யப்படவில்லை என்று கூறி பிரதிவாதிகள் தரப்பு மேற்படி ஆவணத்தை குறியீடு செய்ய ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டது)

பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க வா.சா.ஆ.1 ன் குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.

ஒப்பம் / தர்மராஜ்

ஒப்பம் / - ஆர்.ராதாகிருஷ்ணன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்ககிரி.